# "இலஞ்சம் ஊழலற்ற வளமான இலங்கை"

பாம்பு என்றால் படை நடுங்கும் என்பது
பழைய வாக்கு - இந்தப் பாம்புகள்
பணம் வழங்கும் பச்சோந்திகள்
பந்தலிலே பெரும் பங்காளிகள்.

பாம்புகள் பந்தலில் சொந்தம் கொண்டாடும்
பாவம், இங்கே பசித்தோன் வயிறு - பெரும்
பஞ்சத்தால் வாடும் - பழம்
பறிக்க நினைத்தால் பாய்ந்து கொன்று விடும்.

பாம்புகள் குட்டி ஈன்று
கூட்டம் கும்பலுடன் - தன்
கூடப் பிறந்தோரையும் வைத்து குவிக்கும்
பல கோடிச் சொத்துக்கள் - இங்கு

ஏழை வாழ்வினிலே எரிகடல் போல்
ஏமாற்ற வலைகள்
ஏராளம் வந்து விழும் - வாழ்வின்
ஏற்றம் எண்ணுகையில் வழி ஏங்கும்.

நல்லாட்சியில் நமக்கோர் நல்லவர் - அவர்தான்
"நவீன அகிம்சை வழி மகாத்மாகாந்தி"
பச்சோந்திகளுடன் பாதாள கோஷ்டிகளையும்
பணிவுடன் அடக்குவதில் அவரோர் வல்லவர்.

மக்கள் பணம் சுரண்டி - ஊழலிலே
மன்னராட்சி புரிந்து மகிழ்ச்சி கொண்டாடியதா?
முன்னைய பச்சோந்தி அரசாங்கம் - அதை வேரோடு
முறியடிக்க வந்ததுதான் இப்புதிய அகிம்சை வழி அரசாங்கம்.

இலஞ்சம் எடுப்பதும் கொடுப்பதும் பாவமாம் - எனும்
இனிய மதக் கருத்தையும் மறந்து,
பணத்தாலும், பொருளாலும், சரீரத்தாலும்
பங்கு கொடுக்கின்றனர் இவ் இலஞ்சத்தை.

இலஞ்சம் ஊழலை ஒழித்திடுவோம்
இலங்கை மண்ணிற்குப் புகழ் சேர்ப்போம்.
இம்மைத்திரி அகிம்சை வழி அரசைப் போற்றிடுவோம்.
இந்நாட்டின் வளத்தைக் காத்திடுவோம்.